**<u>உதவி அமர்வு நீதிமன்றம், உசிலம்பட்டி</u>**

முன்னிலை: திரு. L. மகேஸ்வரி, எம்.எல்.,

உதவி அமர்வு மற்றும் சார்பு நீதிபதி, உசிலம்பட்டி

2026–ம் ஆண்டு ஜீன் மாதம் 25–ம் நாள் வியாழக்கிழமை

**<u>அமர்வு வழக்கு எண்.186/2019</u>**

<u>(நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 2, உசிலம்பட்டியின் முதல் நிலை பதிவேட்டு எண்.3/2019)</u>

| | |
|---|---|
| குற்றமுறையீட்டாளர் | அரசுக்காக, எழுமலை காவல் ஆய்வாளர் அவர்கள், எழுமலை காவல் நிலைய குற்ற எண்.326/2018–ன் மூலம். |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | 1) சீனி<br>த/பெ. வாசி<br>ஊரணிபட்டி,<br>சீல்நாயக்கன்பட்டி,<br>பேரையூர் தாலுாகா,<br>மதுரை மாவட்டம். |
| குற்றம் முறையிடப்பட்டது | எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(பி) மற்றும் 307–ன் கீழ் |
| குற்றம் கோப்பிற்கு எடுக்கப்பட்டது. | எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(பி) மற்றும் 307–ன் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது. | எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(பி) மற்றும் 307–ன் கீழ் |
| தீர்வு. | எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(பி) மற்றும் 307–ன் கீழ் குற்றவாளி அல்ல எனத் தீர்வு. |

இவ்வழக்கு என் முன்பாக, கடந்த 19.06.2026–ம் தேதி, இறுதி விசாரணைக்கு வந்தபொழுது, குற்றமுறையீட்டாளருக்காக, கற்றறிந்த அரசு வழக்குரைஞர் திரு.R.இராஜசேகர் அவர்கள் ஆஜராகியும்,

எதிரிக்காக, கற்றறிந்த வழக்குரைஞர் திரு.R.நடராஜன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்:–

## தீர்ப்புரை:–

**1)** சாட்சி 1–ன் மகன் எதிரியின் பேத்தியை திருமணம் செய்து கொண்டதால், சாட்சி 1–ன் குடும்பத்திற்கும், எதிரியின் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்து வந்துள்ள நிலையில், கடந்த 27.12.2018–ம் தேதி அதிகாலை சுமார் 05.00 மணியளவில் சாட்சி 1 வழக்கம் போல் சீல்நாயக்கன்பட்டி கிராமத்தில் உள்ள நாயக்கர் உறவின்முறை கட்டிடத்தில் டீ கடை வைத்திருக்கும் சாட்சி 5–ன் டீக்கடை முன்பு, மேற்படி நாயக்கர் உறவின்முறை கட்டிட வாசல் படிக்கட்டில் தெரு விளக்கு வெளிச்சத்தில் அதே ஊரைச் சேர்ந்த சாட்சிகளான 2, 3, 4 ஆகியோர்களுடன் உட்கார்ந்து டீ குடித்து கொண்டிருந்த போது, தெற்கு பக்கமிருந்து போர்வையை போர்த்தி கொண்டு டீ கடைக்கு வந்த எதிரி சாட்சி 1–ஐ வெட்டி கொலை செய்ய வேண்டும் என்றும் திட்டம் போட்டு, அவரது போர்வைக்குள் மறைத்து வைத்திருந்த அருவாளுடன் சாட்சி 1–ன் அருகில் வந்து சாட்சி 1–யைப் பார்த்து தாயோழி தேவிடியா மகனே என் பேத்தி வாழ்க்கையை சீரழித்த நீ இத்தோட செத்து தொலைந்து போடா என்று ஆவேமாக திட்டி அருவாளைக் கொண்டு சாட்சி 1–ன் முன் பக்க தலையில் வெட்டி சிறுகாயமான ரத்தக்காயத்தை ஏற்படுத்தியும், மேலும், எதிரி சாட்சி 1–ஐ வெட்டிய போது சாட்சி 1

தலையை விலக்கி கொள்ளவும், எதிரியின் அருவாள் சாட்சி 1–ன் பின்பக்க பிடரியில் பட்டு கீறலை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளார். எனவே, எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(பி) மற்றும் 307–ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய ஒன்று, என்று, குற்றமுறையீட்டாளரால், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 2, உசிலம்பட்டியில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**2)** பின், ஷை குற்ற இறுதி அறிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பி.ஆர்.சி. எண்.3/2019–என, எண் கொடுக்கப்பட்டு, எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு. 207–ன் கீழ், நகல்கள் வழங்கப்பட்டு, பின் இவ்வழக்கு, மேல் விசாரணைக்காக மாண்புமிகு முதன்மை அமர்வு நீதிமன்றம், மதுரைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, எஸ்.சி.எண்.186/2019–என, எண் கொடுக்கப்பட்டு, பின் அங்கிருந்து, இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, எதிரி முன்னிலையானதும், அவருக்கு வழக்கு நகல்கள், இலவசமாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதை ஊர்ஜிதம் செய்து, இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில், எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(பி) மற்றும் 307–ன் கீழ் குற்றம் புரிந்திருக்கிறார் என்பதற்கு, போதிய முகநுட்ப ஆதாரங்கள் இருந்ததால், எதிரி மீது, மேற்படி பிரிவுகளின் கீழ், குற்றச்சாட்டுக்கள், வனைந்து, எதிரியிடம், குற்றம் பற்றி விளக்கிக்கூறி, வினவிய பொழுது, எதிரி குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

**3)** அதனால், அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அதன் பேரில், அரசு தரப்பில், 15 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, 8 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் ஒன்று

குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>4) அரசு தரப்பு வழக்கும் மற்றும் சாட்சிய சுருக்கமும் பின்வருமாறு:–</u>**

(i) **அ.சா.1** தங்கமுடி அவருடைய சாட்சியத்தில், எதிரியை தெரியும் என்றும், சுமார் 4 ஆண்டுகளுக்க முன்னர் காலை 5.30 மணிக்கு தங்கள் ஊரில் உள்ள நாயக்கமார் சாலையில் உள்ள டீ கடையில் டீ குடிக்க உட்கார்ந்திருந்த போது எதிரி தெற்கிலிருந்து வடக்காக சமுக்காளத்தை போர்த்தி கொண்டு வந்து தன்னை அருவாளால் உச்சந்தலையிலும், தலைக்கு பின்னர் பிடரியிலம் வெட்டினார் என்றும், அப்போது தான் கீழே விழுந்து விட்டேன் என்றும், தனது மகன் மாரியப்பன், மற்றும் லிங்கப்பன் ஆகிய இருவரும் தன்னை உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும், பின்னர், அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள் என்றும், தான் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும் போது போலீசார் தன்னை விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் அருவாள் தான் எதிரி தன்னை வெட்டி காயப்படுத்தியது என்றும், மேற்படி சம்பவத்திற்கு காரணம் எதிரியின் பேத்தியை அ.சா.1–ன் 5–வது மகன் காதலித்து வந்ததால் எதிரி முன்விரோதம் வைத்துக்கொண்டு அ.சா.1–ஐ கொலை செய்யும் நோக்கத்தோடு வெட்டினார் என்றும், ஆகையால் தான் போலிசாரிடம் எதிரி மீது புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் தான் கொடுத்தது தான் என்றும், அது **அ.சா.ஆ.1** என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) **அ.சா.2** கந்தன் அவருடைய சாட்சியத்தில், எதிரியை தெரியும் என்றும், தான் டீ கடையில் டீ குடித்துக்கொண்டிருந்த போது, காலை 5.30 மணிக்கு எதிரி தெற்கிலிருந்து டீ கடைக்கு வந்தார் என்றும், டீ கடையில் தண்ணீர் வாங்கினார் என்றும், அப்பொழுது டீ கடையில் தான், அ.சா.1 தங்கமுடி, ஜெயக்கொடி, வெள்ளை, தங்கப்பன் ஆகியோர்கள் இருந்தோம் என்றும், அப்போது எதிரி சமுக்காளத்தில் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து அ.சா.1–ன் தலையில் வெட்டினார் என்றும், தாங்கள் எல்லோரும் சேர்ந்து எதிரியை பிடித்தோம் என்றும், அதன்பிறகு அ.சா.1 –ன் மகன்கள் வந்து அவரை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்துள்ளார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) **அ.சா.3** மூக்கையா அவருடைய சாட்சியத்தில், எதிரியை தெரியும் என்றும், சுமார் 4 வருடங்களுக்கு முன்பு சீல்நாயக்கன்பட்டி ஜெயக்கொடியின் டீக் கடையின் முன்பு காலை 5 மணிக்கு டீ குடித்துக்கொண்டிருந்த போது, தன்னுடன் 4 பேர்கள் இருந்தார்கள் என்றும், அப்போது, எதிரி தெற்கிலிருந்து வடக்காக வந்தார் என்றும், உன்னை வெட்டிக் கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி அ.சா.1–ன் தலையில் வெட்டரிவாளால் வெட்டினார் என்றும், அப்போது, ஆட்கள் வந்து விலக்கிவிட்டார்கள் என்றும், அப்போது, எதிரி வடக்கே சென்றுவிட்டார் என்றும், அ.சா.1–ஐ அவரின் உறவினர்கள் எழுமலை, அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) **அ.சா.4** லிங்கப்பன் அவருடைய சாட்சியத்தில், கடந்த 6 வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் காலை 5.00 மணியளவில் டீக்

குடிக்க ஜெயக்கொடி கடைக்கு தனது அப்பா சென்றார் என்றும், தெற்கு பக்கம் எதிரி போர்வையை பொத்தி அதில் அருவாளை கொண்டு வந்தார் என்றும், எதிரி தனது பேத்தியை கெடுத்துவிட்டீர்களேடா, இதோடு செத்து தொலைடா என தலையிலும், பின்னாடி பிடரியுலும் வெட்டி அ.சா.1–ஐ காயப்படுத்தினார் என்றும், ஊர்க்காரர்கள் தனது அப்பா தங்கமுடியை எதிரி முன்விரோதம் காரணமாக வெட்டிவிட்டார் என்று சொன்னார்கள் என்றும், தான் தகவல் கிடைத்து எழுமலை காவல் நிலையத்திற்கு தானும், தனது தம்பியும் தனது அப்பாவை வழியிலிருந்த ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு சென்றோம் என்றும், அங்கு போலீசார் தனது அப்பாவை உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு போக அறிவுறுத்தினார்கள் என்றும், காயத்தின் தன்மை கருதி உசிலம்பட்டியிலிருந்து மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், அங்கு தனது அப்பா 15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார் என்றும், போலீசார் உசிலம்பட்டி, மதுரை அரசு மருத்துவமனைகளில் விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(v) **அ.சா.5** மாரியப்பன் அவருடைய சாட்சியத்தில், எதிரியை தெரியும் என்றும், சுமார் 6 வருடங்களுக்கு முன்னர் ஒருநாள் காலை 5.00 மணிக்கு டீக் குடிக்க சென்ற போது, எதிரியின் பேத்தியை தனது அண்ணன் திருமணம் செய்திருந்தார் என்றும், இதனால் எதிரி அருவாளை மறைத்து கொண்டு வந்து அ.சா.1–ஆன தனது அப்பாவை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி தலையிலும், பிடனியிலும் வெட்டி காயத்தை ஏற்படுத்தினார் என்றும், மேற்படி சம்பவத்தை அப்போது,

பால்பிய்ச்சிவிட்டு வந்த தங்கப்பன் தன்னிடம் சொன்னார் என்றும், அதன்பின்னர் வழியில் இருந்த ஆட்டோவில் தனது அப்பாவை ஏற்றிக்கொண்டு உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றும், அதன் பின்னர் தனது அப்பாவை மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், போலீசார் தன்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள் என்றும், அப்போது தான் அறிவேன் சாட்சியாக புகார் வாக்கு மூலத்தில் கையெழுத்து செய்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(vi) **அ.சா.6** ஜெயக்கொடி அவருடைய சாட்சியத்தில், கடந்த 4 வருடங்களுக்கு முன்னர் ஒருநாள் தான் டீக்கடையில் இருந்த போது, சத்தம் கேட்டு வெளியில் வந்து பார்த்த போது, அங்கு யாரையோ குத்திவிட்டார்கள் என்று சொன்னார்கள் என்றும், யாரை யார் குத்தினார்கள் என்பதை தான் நேரியாக பார்க்கவில்லை என சாட்சியளித்துள்ளார்.

(vii) **அ.சா.7** துர்கேஸ்வரன் அவருடைய சாட்சியத்தில், எதிரியை தெரியும் என்றும், கடந்த 2018—ம் வருடம் ஒருநாள் காலை 5.30 மணிக்கு நாயக்கர் உறவுமுறை சாவடிக்கு அருகில் உள்ள டீக்கடைக்கு முன்னர் அ.சா.1 வெட்டுப்பட்டு கிடந்தார் என்றும், அ.சா.1 மற்றும் அவரது மகன் ஆகியோர்களை தான் ஆட்டோவில் ஏற்றி எழுமலை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றேன் என்றும், அங்கிருந்து ஆம்புலன்சில் உசிலம்பட்டி, அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(viii) **அ.சா.8** முனியாண்டி மற்றும் **அ.சா.9** ராஜா ஆகியோர்கள் அவர்களுடைய சாட்சியத்தில், தங்களுக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்கள். **அ.சா.10** கருப்பையா அவருடைய சாட்சியத்தில், எதிரியை தெரியும் என்றும், தன்னிடம் காட்ப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், போலீசார் சாட்சிக்காக கேட்டுக்கொண்டதால் போட்டேன் என்றும், சம்பவத்தை கேள்விப்பட்டேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ix) **அ.சா.11** சீனியப்பன் அவருடைய சாட்சியத்தில், தனக்கு எதிரியைத் தெரியும் என்றும், தன்னிடம் காட்ப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், தன்னுடன் குமார் என்பவரும் கையெழுத்து செய்தார் என்றும், போலீசார் விசாரணை செய்ததால் கையெழுத்து போட்டேன் என சாட்சியம் அளித்துள்ளார். **அ.சா.12** குமார் தன்னுடைய சாட்சியத்தில், எதிரியை தெரியும் என்றும், தன்னிடம் காட்ப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், தன்னுடன் சீனியப்பன் என்பவரும் கையெழுத்து செய்தார் என்றும், எதற்காக கையெழுத்து போட்டேன் என ஞாபகமில்லை என்றும், போலீசார் விசாரணை செய்ததால் கையெழுத்து செய்தேன் என்றும் சாட்சிம் அளித்துள்ளார்.

(x) **அ.சா.13** மருத்துவர் மணிகன்டன் அவருடைய சாட்சியத்தில், தான் தற்போது மதுரை, அரசு ராஜாஜி மருத்துவமனையில் பொது மருத்துவத்துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன்

என்றும், 2018–ம் ஆண்டு உசிலம்பட்டி, அரசு மருத்துவமனையில் வேலை பார்க்கும்போது, 27.12.2018–ம் தேதி பணியில் இருந்தபோது காலை 6.50 மணியளவில் 70 வயது மதிகத்தக்க சின்ன சிவனாண்டி மகன் தங்கமுடி என்பவர் தன்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார் என்றும், அவரை விசாரித்தபோது அவர் காலை 5.00 மணியளவில் சீல்நாயக்கன்பட்டி மாரியம்மன் கோயில் அருகில் உள்ள டீக் கடை அருகில் 6 தெரிந்த நபர்கள் தன்னை அரிவாளால் தாக்கியதாக கூறினார் என்றும், 15 நிமிடங்கள் சுயநினைவு இல்லாமல் இருந்ததாக சொன்னார் என்றும், அவரை பரிசோதித்தபோது, தலையின் முன்பக்கம் கிழிந்த நிலையில் 10x1 செ.மீ அளவிலான காயம் காணப்பட்டது என்றும், கழுத்தின் பின்பகுதியில் 3x1 செ.மீ அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது என்றும், அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சையளித்து, பின்னர் தலையில் ஏற்பட்ட காயத்திற்காக மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றும், அங்கு அவருக்கு மருத்துவர் லட்சுமிநாராயணன் அவர்கள் சிகிச்சை அளித்துள்ளார் என்றும், மேற்படி மருத்துவரின் கருத்துரையின் படி காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயங்கள் சிறிய காயம் என சான்று வழங்கினேன் என்றும், அந்த காயச்சான்று **அ.சா.ஆ.2** என்றும், இது சம்மந்தமாக உசிலம்பட்டி காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(xi) **அ.சா.14** சார்பு ஆய்வாளர். பாலுச்சாமி அவருடைய சாட்சியத்தில், தான் 27.12.2018ம் தேதி எழுமலை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது உசிலம்பட்டி

மருத்துவமனையிலிருந்து வந்த தகவலின் படி காலை 6 மணிக்கு உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றும், மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த சின்னசிவனாண்டி மகன் தங்கமுடி வயது 75, அவரை பார்த்து சம்பவத்தை பற்றி விசாரணை செய்து, அவர் நடந்த சம்பவத்திற்கு தன்னிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், மேற்படி புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து, எழுமலை காவல்நிலையம் வந்து கு.எண்.326/18, பிரிவுகள் 294(பி), 307 இதசவின் படி வழக்கு பதிவு செய்தேன் என்றும், தான் பதிவுசெய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** என்றும், முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகல், அசல் புகார் வாக்குமூலம் ஆகியவற்றை உசிலம்பட்டி நீதித்துறை நடுவர் எண் 2–க்கு அனுப்பி வைத்தேன் என்றும், பிற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், ஒரு நகலை ஆய்வாளருக்கு விசாரணைக்கு கொடுத்தேன் என்றும், ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(xii) **அ.சா.15** சார்பு ஆய்வாளர். இளவரசு அவருடைய சாட்சியத்தில், தான் தற்போது எழுமலை வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 27.12.2018–ம் தேதி சார்பு ஆய்வாளர் பாலுச்சாமி என்பவருக்கு கிடைத்த தகவலின் பேரில் உசிலம்பட்டி, அரசு மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையலிருந்து தங்கமுடி என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று 9.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய கு.எண்.326–2018, பிரிவுகள் 294(பி), 307 இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், வழக்கினை மேல்விசாரணைக்காக

ஆய்வாளர் முத்து என்பவருக்கு வைத்துள்ளார் என்றும், புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் ராஜா, கருப்பையா ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ.4** மற்றும் **அ.சா.ஆ.5** தயார் செய்தார் என்றும், பின்னர் சாட்சிகள் தங்கமுடி, முத்தையா, கந்தன், தங்கப்பன், ஜெயக்கொடி மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார் என்றும், வழக்கின் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் எதிரியை அன்றைய தினமே வங்கிநாராயணபுரம் மின்சார அலுவலகத்திற்கு அருகில் வைத்து கைது செய்துள்ளார் என்றும், சாட்சிகள் சீனியப்பன், குமார் ஆகியோர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.6** என்றும், பின்னர் 16.30 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் அருவாளை அத்தாட்சி மூலம் கைப்பற்றியுள்ளார் என்றும், அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.7** என்றும், பின்னர் எதிரியையும், வழக்கு சொத்துக்களையும் படிவம் 91–ன் மூலம் நீதிமன்றத்திற்க அனுப்பி வைத்துள்ளார் என்றும், அந்த படிவம் 91 **அ.சா.ஆ.8** என்றும், கைப்பற்றப்பட்ட அருவாள் **சா.பொ.1** என்றும், பின்னர் சாட்கிள் இருளப்பன், மாரியப்பன், துர்க்கேஷ்வரன், முனியாண்டி மற்றும் சார்பு ஆய்வாளர் பாலுச்சாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர், அவர் பணிமாறுதலில் சென்றபடியால் அதன்பின் வந்த காவல் ஆய்வாளர் ஜாஸ்மின் மும்தாஜ் என்பவர் இந்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காயம்பட்ட

புகார்தாரருக்கு சிகிச்சையளித்த லட்சுமிநாராயணன், மணிகண்டன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, காயச்சான்று பெற்றுள்ளார் என்றும், பின்னர் எதிரி மீது பிரிவுகள் 294(பி) மற்றும் 307 இதச வின் கீழ் குற்றயிறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**5)** அரசு தரப்பு சாட்சியங்களில் காணப்பட்ட, எதிரிக்கு பாதகமாக உள்ள, அம்சங்கள் குறித்து, கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ)–ன் கீழ், எதிரியிடம் எடுத்துக்கூறி, வினவியபொழுது, அவர், பொய்சாட்சி என்றும் இவ்வழக்கு குறித்து ஏதேனும் கூறிக்கொள்ள விரும்புகிறீர்களா? என்று வினவிய பொழுது, பொய் வழக்கு என்றும், எதிரி தரப்பில் விசாரிக்க, சாட்சிகள் ஏதும் இருக்கிறதா? என்று வினவியபொழுது, இல்லை என்றும் தெரிவித்தார்.

**6) தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:–**

அரசு தரப்பால், எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள், சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டிருக்கிறதா? என்பதே ஆகும்.

**7) பிரச்சனைக்குரிய தீர்வு:–**

(i) முதலாவதாக, அரசு தரப்பு வழக்கானது, சாட்சி 1–ன் மகன் எதிரியின் பேத்தியை திருமணம் செய்து கொண்டதால், சாட்சி 1–ன் குடும்பத்திற்கும், எதிரியின் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்து வந்துள்ள நிலையில், கடந்த 27.12.2018–ம் தேதி அதிகாலை சுமார் 05.00 மணியளவில் சாட்சி 1 வழக்கம் போல் சீல்நாயக்கன்பட்டி கிராமத்தில் உள்ள நாயக்கர் உறவின்முறை கட்டிடத்தில் டீ கடை வைத்திருக்கும் சாட்சி 5–ன் டீக்கடை முன்பு, மேற்படி நாயக்கர்

உறவின்முறை கட்டிட வாசல் படிக்கட்டில் தெரு விளக்கு வெளிச்சத்தில் அதே ஊரைச் சேர்ந்த சாட்சிகளான 2, 3, 4 ஆகியோர்களுடன் உட்கார்ந்து டீ குடித்து கொண்டிருந்த போது, தெற்கு பக்கமிருந்து போர்வையை போர்த்தி கொண்டு டீ கடைக்கு வந்த எதிரி சாட்சி 1–ஐ வெட்டி கொலை செய்ய வேண்டும் என்றும் திட்டம் போட்டு, அவரது போர்வைக்குள் மறைத்து வைத்திருந்த அருவாளுடன் சாட்சி 1–ன் அருகில் வந்து சாட்சி 1–யைப் பார்த்து தாயோழி தேவிடியா மகனே என் பேத்தி வாழ்க்கையை சீரழித்த நீ இத்தோட செத்து தொலைந்து போடா என்று ஆவேமாக திட்டி அருவாளைக் கொண்டு சாட்சி 1–ன் முன் பக்க தலையில் வெட்டி சிறுகாயமான ரத்தக்காயத்தை ஏற்படுத்தியும், மேலும், எதிரி சாட்சி 1–ஐ வெட்டிய போது சாட்சி 1 தலையை விலக்கி கொள்ளவும், எதிரியின் அருவாள் சாட்சி 1–ன் பின்பக்க பிடரியில் பட்டு கீறலை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளார். எனவே, எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(பி) மற்றும் 307–ன் கீழ் குற்றம் புரிந்துள்ளார் என்பதாகும்.

(ii) அடுத்ததாக, இந்த வழக்கில் காயம்பட்ட மற்றும் கண்ணுற்ற அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் அவர்களது முதல் விசாரணையில் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக சாட்சியம் அளித்திருந்தாலும், அவர்களது குறுக்கு விசாரணையில், சம்பவத்தின் போது யார் அ.சா.1–ஐ தாக்கினார்கள் என்பது தங்களுக்கு தெரியாது என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்தோம் என்றும், தற்போது, எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டதாகவும் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாறியுள்ளார்கள்.

அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர்கள் காயம்பட்ட சாட்சி 1–ன் மகன்கள் ஆவார்கள். அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர்கள் மேற்படி சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், சம்பவம் நடந்ததாக கேள்விப்பட்டு அ.சா.1–ஐ உசிலம்பட்டி, அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக அவர்களது முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவே, அ.சா.4 மற்றும் அ.சா.5–ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக அமையவில்லை. அ.சா.6 அவரது முதல் விசாரணையிலேயே சம்பவத்தை தான் நேரடியாக பார்க்கவில்லை என அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார். அ.சா.7 அவருடைய சாட்சியத்தில், கடந்த 2018–ம் வருடம் ஒருநாள் காலை 5.30 மணிக்கு நாயக்கர் உறவுமுறை சாவடிக்கு அருகில் உள்ள டீக்கடைக்கு முன்னர் அ.சா.1 வெட்டுப்பட்டு கிடந்தார் என்றும், அ.சா.1 மற்றும் அவரது மகன்களை தான் ஆட்டோவில் ஏற்றி எழுமலை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றேன் என்றும், அங்கிருந்து ஆம்புலன்சில் உசிலம்பட்டி, அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், மேற்படி சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், நேரடியாக பார்க்கவில்லை என்றும் என்றும் சாட்சியமளித்துள்ளார். ஆக, அ.சா.7–ன் சாட்சியமும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக அமையவில்லை.

(iii) அடுத்ததாக, அ.சா.8 மற்றும் அ.சா.9 ஆகியோர்கள் அவர்களுடைய சாட்சியத்தில், தங்களுக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும், அ.சா.10 அவருடைய சாட்சியத்தில், எதிரியை தெரியும் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், போலீசார் சாட்சிக்காக

கேட்டுக்கொண்டதால் போட்டேன் என்றும், சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை, கேள்விப்பட்டேன் என்றும் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார்கள்.

(iv) அ.சா.11 அவருடைய சாட்சியத்தில், தனக்கு எதிரியைத் தெரியும் என்றும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், தன்னுடன் குமார் என்பவரும் கையெழுத்து செய்தார் என்றும், போலீசார் விசாரணை செய்ததால் கையெழுத்து போட்டேன் என்றும் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். **அ.சா.12** அவருடைய சாட்சியத்தில், எதிரியை தெரியும் என்றும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், தன்னுடன் சீனியப்பன் என்பவரும் கையெழுத்து செய்தார் என்றும், எதற்காக கையெழுத்து போட்டேன் என ஞாபகமில்லை என்றும், போலீசார் விசாரணை செய்ததால் கையெழுத்து செய்தேன் என்றும் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார்.

(v) அடுத்ததாக, அ.சா.1–ற்கு சிகிச்சையளித்த மருத்துவர் அ.சா.13–ன் சாட்சியத்தை கவனத்தில் கொள்ளும் போது, அ.சா.1– 27.11.2018–ம் தேதி காலை 5.00 மணியளவில் சீல்நாயக்கன்பட்டி மாரியம்மன் கோயில் அருகில் உள்ள டீக்கடை அருகில் 6 தெரிந்த நபர்கள் தன்னை அருவாளால் தாக்கியதாக கூறியுள்ளார். அவரை பரிசோதித்த போது, தலையின் முன்பக்கம் கிழிந்த நிலையில் 10 X 1 செ.மீ அளவிலான காயம் இருந்ததாகவும், கழுத்தின் பின்பகுதியில் 3 X 1

செ.மீ அளவில் சிராய்ப்பு காயம் இருந்ததாகாவும் தெரிவித்திருக்கிறார். ஆனால், அ.சா.1 அவரது முதல் விசாரணையில் எதிரி தன்னை அருவாளால் உச்சந்தலையிலும், தலைக்கு பின்னர் பிடரியிலும் வெட்டியதாக தெரிவித்திருக்கிறார். ஆக, அ.சா.1 அவரது முதல் விசாரணையிலும், மருத்துவரிடமும் முன்னுக்குபின் முரணாக கூறியுள்ளார். மேலும், அ.சா.1–ற்கு ஏற்பட்ட காயங்கள் மூங்கில் மர கொப்புகள் விழுவதாலும், கூர்மையான ஆயுதத்தின் மீது விழும் போதும் ஏற்பட வாய்ப்புள்ளதாக அ.சா.13 மருத்துவர் தெரிவித்துள்ளார். எனவே, அ.சா.13 மருத்துவரின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு போதுமானதாக அமையவில்லை. மேலும், அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகத்தை எழுப்புகிறது.

**8)** அடுத்ததாக, சார்பு ஆய்வாளர் அ.சா.14 மற்றும் காவல் ஆய்வாளர் அ.சா.15 ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கை ஆதரித்து சாட்சியமளித்திருந்தாலும், அ.சா.1– புகார்தாரரே, அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக சாட்சியமளித்திருக்கிற சூழ்நிலையில், அவர்களது சாட்சியத்திற்கு இந்நீதிமன்றத்தால், எவ்விதமான சான்று மதிப்பும் அளிக்க இயலவில்லை. மேலும், மேற்படி கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் தங்களது சாட்சியத்தில் சட்டப்பிரிவு 294(பி) இ.த.ச–விற்கு தேவையான ஆபாச வார்த்தைகளை பொது இடத்தில் பயன்படுத்தியதாகவோ, அங்கிருந்த பொது மக்களுக்கு அறுவறுப்பை ஏற்படுத்தியதாக சாட்சியம் அளிக்கவில்லை. அதுபோன்று, சட்டப்பிரிவு 307 இ.த.ச–விற்கு தேவையான கொலை செய்யும் நோக்கம்

மற்றும் சம்பவத்தில் குற்றவாளியின் பங்கு ஆகியவற்றை உறுதி செய்யும் விதமாக அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் அவர்களது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளிக்கவில்லை. வழக்கின் முக்கிய சாட்சிகளே அவர்களது குறுக்கு விசாரணையில் அரசு தரப்பு வழக்கை மறுத்துள்ளதால், அரசு தரப்பு வழக்கில் கடுமையான சந்தேகம் எழுகிறது. எனவே, சட்டத்தின் அடிப்படை கோட்பாடான சந்தேகத்தின் பலனை எதிரிக்கே வழங்கப்பட வேண்டும். மேலும், மேற்படி ஒட்டுமொத்த சாட்சியங்களிலிருந்து அரசு தரப்பால், எதிரி மீது, சுமத்தப்பட்டிருக்கிற குற்றச்சாட்டுக்கள், சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று, இந்நீதிமன்றம் முடிவு செய்து, அவ்வாறே, இந்த பிரச்சனைக்கு, அரசுக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக, எதிரி மீதான இ.த.ச. பிரிவுகள் 294(பி), மற்றும் 307–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி நிருபிக்கபடவில்லை, என்று தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில், ஆர்.பி.ஆர்.எண். 13/2023–ல் கைப்பற்றப்பட்ட கத்தி **சா.பொ.1** அருவாள் பயனற்றது என்பதால் மேல்முறையீடு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப் பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் படித்துப்பார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026–ம்

ஆண்டு ஜீன் மாதம் 25–ம் நாள், என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

L MAHESWARI

Digitally signed by L MAHESWARI
Date: 2026.06.25 06:10:17 +0530

உதவி அமர்வு நீதிபதி,
உசிலம்பட்டி.

**1) அரசு தரப்பு சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. தங்கமுடி |
| அ.சா.2 | திரு. கந்தன் |
| அ.சா.3 | திரு. மூக்கையா |
| அ.சா.4 | திரு. லிங்கப்பன் |
| அ.சா.5 | திரு. மாரியப்பன் |
| அ.சா.6 | திரு. ஜெயக்கொடி |
| அ.சா.7 | திரு. துர்கேஸ்வர்ன் |
| அ.சா.8 | திரு. முனியாண்டி |
| அ.சா.9 | திரு. ராஜா |
| அ.சா.10 | திரு. கருப்பையா |
| அ.சா.11 | திரு. சீனியப்பன் |
| அ.சா.12 | திரு. குமார் |
| அ.சா.13 | திரு. மருத்துவர். மணிகண்டன் |
| அ.சா.14 | திரு. சார்பு ஆய்வாளர். பாலுச்சாமி |
| அ.சா.15 | திரு. காவல் ஆய்வாளர். இளவரசு |

**2) அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | காயச்சான்றிதழ் |

| | |
|---|---|
| அ.சா.ஆ.3 | முதல் தவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.7 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.8 | படிவம் 91 |

**3) அரசு தரப்பு சான்றுபொருள் :–**

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | அருவாள் |

**4) எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்:–**

– இல்லை –

L MAHESWARI Digitally signed by L MAHESWARI Date: 2026.06.25 06:10:31 +0530

உதவி அமர்வு நீதிபதி,
உசிலம்பட்டி.

**இணைப்பு 1:–**

1) இவ்வழக்கு விசாரணையின் பொழுது, எதிரி பிணையில் இருந்தார்.

2) சாட்சிகள் எவரும் மூன்று தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.

3) தீர்ப்பு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

L MAHESWARI Digitally signed by L MAHESWARI Date: 2026.06.25 06:10:41 +0530

உதவி அமர்வு நீதிமன்றம்,
உசிலம்பட்டி.

**Judicial Form No.61.**

[See Rule 106]

IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, THIRUMANGALAM

JUDGMENT IN SESSIONS CASE No. 186 Of 2019

ON THE FILE OF THE HONOURABLE PRINCIPAL SESSIONS COURT, MADURAI

| | |
|---|---|
| Complainant: | The Circle Inspector of Police, Elumalai Police Station. |
| Accused : | 1) Seeni,<br>S/o Vasi,<br>Ooranipatti,<br>Sealnayakkanpatti,<br>Peraiyur Taluk,<br>Madurai District. |
| Offence : | The accused has charged for the offence punishable U/s. 294(b), and 307 of I.P.C. |
| Finding : | Acquitted |
| Sentence : | Acquitted |

| Serial Number | Description of the accused | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Name. | Father's name. | Caste or race. | Occupation. | Residence. | Age. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1) | Seeni, | S/oVasi | Hindu | --- | Ooranipatti, Sealnayakkanpatti, Peraiyur Taluk, Madurai District. | --- |

| Date of | | | | | | | Explanation of delay. |
|---|---|---|---|---|---|---|---|
| Occur-rence. | Com-plaint. | Apprehen sion or appearanc e. | Release on bail. | Commen-cement of trail | Close of trial. | Sentence or order. | |
| (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| 27.12.18 | 27.12.18 | 27.12.18 | 26.02.19 | 12.03.21 | 25.06.26 | Acquitted | --- |

L MAHESWARI Digitally signed by L MAHESWARI Date: 2026.06.25 06:10:49 +0530

Assistant Sessions Judge,
Usilampatti.

உதவி அமர்வு நீதிமன்றம்,
உசிலம்பட்டி.

அமர்வு வழக்கு எண்.186/2019

25.06.2026

தீர்ப்புரை